NST Campus

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

| தரம் 09 | நாடகமும் அரங்கியலும் | 2 மணித்தியாலம் |
| --- | --- | --- |

**சுட்டிலக்கம் : ......................** **புள்ளிகள்**

**மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக**

01. நாடகம் என்பதற்கான பழந்தமிழ் சொல்
    1. குதி 2. கூத்து 3. கலை 4. ஆற்றுகை
02. பாத்திரமொன்றில் உள்ளடங்கியிருக்கும் பல்வேறு முகங்கள்
    1. பாத்திரம் 2. பங்கு 3. முகங்கள் 4. வகிபாகம்
03. பாத்திரமொன்றின் அக ரீதியான இயல்புகளில் ஒன்று
    1. உடலசைவுகள் 2. உடற்தோற்றம் 3. ஆடைகள் 4. அணிகலன்கள்
04. பொருளோ பொருள் எனும் நாடகத்தின் ஆசிரியர்
    1. சி. மௌனகுரு 2. சி. ஜெய்சங்கர் 3. க. கணபதிப்பிள்ளை 4. இப்சன்
05. ‘ரஸம்’ என்று பரதர் கூறுவது எதனை?
    1. பாவத்தினை 2. சித்திரிப்பினை 3. பாத்திரங்களை 4. பாத்திரப் பண்பிணை
06. காட்சி விதானிப்பு என்பது எவ்வகைச் சித்திரிப்பினுள் உள்ளடங்கும்
    1. உடல் வழிச்சித்திரிப்பு 3. குரல் வழிச்சித்திரிப்பு
    2. உணர்வு வழிச்சித்திரிப்பு 4. காண்பிய வழிச்சித்திரிப்பு
07. கூத்தின் பிரதான அம்சங்களில் ஒன்று
    1. ஆடல் 2. பாடல் 3. ஊட்டு வசனங்கள் 4. யாவும் சரி
08. கதை தழுவி வராத கூத்துக்களில் ஒன்று
    1. தென்மோடி 2. வடமோடி 3. பறைமேளக்கூத்து 4. காத்தவராயன்
09. அரங்கின் கேட்பிய மூலகமாக அமைவது எது ?
    1. இசை 2. காட்சியமைப்பு 3. வேடஉடை 4. ஆடல்
10. தனிமனிதர்களை வாழ்த்தி ஆடப்படும் வசந்தன் கூத்துக்களில் ஒன்று
    1. கட்டு வசந்தன் 2. தம்பாப்பிள்ளை வசந்தன்
    3.. பிள்ளையார் வசந்தன் 4. முயிற்று வசந்தன்
11. உடலுக்கு பயிற்சியைத் தரவல்ல அரங்க விளையாட்டு
    1. 7 up 2. பஸ் 3. கண்ணாடி 4. ஆடும் வீடும்
12. யதார்த்த நாடகங்களில் ஒன்று
    1. எந்தையும் தாயும் 2. கண்டறியாத கதை 3. அரசனின் புத்தாடை 4. மழை
13. சங்கிலியன், கருங்குயில் குன்றத்துக் கொலை போன்றவைகளில் நடித்தும் நெறிப்படுத்தியும் வந்த கூத்துக் கலைஞர்
    1. பூந்தான் யோசேப்பு 2. நாகமணிப்போடி 3. முருகவேள் 4. குழ.செபமாலை
14. சிறிய தடிகளை தட்டிக் கொண்டு சிறுவர்களால் அதிகமாக ஆடப்படும் கூத்து
    1. காத்தவராயன் கூத்து 3. காமன் கூத்து
    2. வசந்தன் கூத்து 4. பறைமேளக் கூத்து
15. சங்கிலி நாடகத்தின் ஆசிரியர்
    1. க. கணபதிப்பிள்ளை 3. குழ. ம. சண்முகலிங்கம்
    2. சி. மௌனகுரு 4. சு. வித்தியானந்தன்

(15x2 = 30 புள்ளிகள்)

- **சுருக்கமான விடை தருக**

01. மோதுகை என்றால் என்ன?
02. பாத்திர பண்புருவாக்கத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளில் ஒன்று தருக?
03. இரு பிரதான மோடிகளும் எவை?
04. வாழ்வியற் சடங்குகள் இரண்டு தருக?
05. நாடக எழுத்துரு ஒன்றை படைப்பவர்?
06. ஆடல் வல்லான் என அழைக்கப்படுபவர்?
07. மரபுவழிக் கூத்துக் கலைஞர் ஒருவரைப் பெயரிடுக?
08. மன்னார் முத்தமிழ் கலாமன்றத்தை உருவாக்கியவர்?
09. ஈழத்தின் நவீன நாடகத்தின் தந்தையாகக் கருதப்படுபவர்?
10. சங்கிலி நாடகத்தின் கரு யாது?

(10 புள்ளிகள்)

## பகுதி – II

- **தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. (i) துணைக்கலைகள் என்றால் என்ன?

(ii) நாடகத்தில் பயன்படுத்தப்படும் துணைக்கலைகள் ஆறு தருக?

(iii) நாடகத்தில் வேட உடை, ஒப்பனை ஆகியவற்றின் பயன்பாடுகள் மூன்று மூன்று தருக?

**( 3+3+6=12 புள்ளிகள்)**

02. (i) வரலாற்று நாடகங்களில் நடிகர் பயன்படுத்தும் கைப்பொருட்கள் மூன்று தருக?

(ii) அவற்றில் ஏதாவது இரண்டினை வரைந்து, அதனைப் பயன்படுத்தும் பாத்திரங்கள் இரண்டு இரண்டு தருக?

**( 3+9 =12 புள்ளிகள்)**

03. (i) அரங்க விளையாட்டு என்றால் என்ன?

(ii)கூட்டாக விளையாடக் கூடிய அரங்க விளையாட்டுக்கள் நான்கு தருக?

(iii) அரங்க விளையாட்டுக்களை விளையாடுவதனால் மாணவரிடையே ஏற்படும் மாற்றங்கள் ஐந்து தருக?

**( 3+4+5=12 புள்ளிகள்)**

04. (i) கூத்தில் பாத்திர வரவானது இடம் பெறும் மூன்று முறைகளும் எவை?

(ii) பாத்திரவரவின் போது பாத்திரம் பற்றி வெளிப்படுத்தப்படும் விடயங்கள் மூன்று தருக?

(iii) கூத்தின் பாடல்களைப் பாடும் போதும் ஆடல்களைப் பயிலும் போதும் கவனத்தில் கொள்ள வேண்எய விடயங்கள் 3 தருக?

**( 3+3+6=12 புள்ளிகள்)**

05. (i) வசந்தன் கூத்தானது ஆடப்படுவதற்கான காரணங்கள் மூன்று தருக?

(ii) வசந்தன் கூத்தானது ஆடப்படும் பிரதேசங்கள் நான்கு தருக?

(iii) உமக்குத் தெரிந்த வசந்தன் கூத்துப் பாடலொன்றினை முழுமையாக எழுதுக?

**( 3+4+5=12 புள்ளிகள்)**